முருகப்பெருமான் துணை

**மகான் கணம்புல்ல நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.05.2024**, வியாழக்கிழமை

1. ஞான வள்ளலே அரங்கா
ஞான லோகம் படைக்க
தானதரும நெறிமுறை கொண்டு
தயவாய் அருளும் தேசிகா
2. தேசிகா உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
ஆசிதனை குரோதி தகர்திங்கள்
அறுநான்கீர் திகதி குருவாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 26 ம் நாள், 09.05.2024, வியாழக்கிழமை)
3. வாரமதில் கணம்புல்ல நாயனாரும்
வழங்குவேன் உலகநலம் பெற
சோரமின்றி மக்களை மீட்க
சுத்தநெறி காட்டும் ஞானி
4. ஞானி அரங்கன் வழிதனில்
நல்லமாற்றம் நடத்திட
கனிவேலவனும் அருளிவர
கட்டாயம் கலியுக மக்கள்
5. மக்களும் சாதிமத பேதம் கடந்து
மகா குருவேயென வணங்கி
தேக்கமின்றி தொடர்ந்து வர
தெரிவிக்க அன்னதான சேவை
6. சேவை துவக்கி உலகெல்லாம்
செப்பிட கிளைகள் படைத்து
அவனியில் தருமம் பெருக்க
அகிலத்தை வாட்டி வதைக்கும்
7. வதைக்கும் பசிபிணி அகல
வளமான ஞான பூமியாக
பூதலம் மாற்றம் கண்டு
புண்ணிய பலம்தனை அடையும்

8. அடையவே உலகினில் மாற்றம்
அரங்கன் விதைத்த தருமவழி
தடையற உயர் தொண்டர்கள் வழி
தவராஜனின் அவதாரம் வழி

9. வழிதனில் மாற்றம் கண்டு
வல்லயைான ஞானிகள்
வெளிப்பட உலக மாற்றமாக
விரைந்துமே ஞானவான்கள் இணைய

10. இணைய நல்ல ஆட்சி
இணையிலா ஞான ஆட்சி
துணையென ஆறுமுகனாரும்
தேசிகனார் சக்தியாக வர

11. வருகவே உலகம் தன்னில்
வல்லமையான ஒரே குடையாக
முருகப்பெருமான் ஞான ஆட்சி வரும்
மொழிந்திட்ட துல்லிய ஆசி முற்றே

–சுபம்–